தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:20-11-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## மஞ்சளை இருப்பு வைத்து விற்கலாம்

உலகளவில் இந்தியா, மஞ்சள் உற்பத்தி, நுகர்வு மற்றும் ஏற்றுமதியில் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஐக்கிய அரபு நாடுகள், ஜப்பான், ஈரான் மற்றும் ஐக்கிய அரசு நாடுகள் ஆகியவை இந்தியாவிலிருந்து மஞ்சள் இறக்குமதி செய்யும் முக்கிய நாடுகளாகும். இந்தியாவில் மஞ்சள் ஏற்றுமதி, 2013-14ல் 27,000 டன்கள் ஆகும். இது கடந்த ஆண்டு ஏற்றுமதியான 25, 758 விட அதிகமாகும்.

வாசனைப் பொருட்கள் வாரியத்தின் மதிப்பீட்டின் படி, இந்தியாவில் மஞ்சள் உற்பத்தி 2014ல், 35 - 40 லட்சம் மூட்டைகளாகும் (ஒரு மூட்டை 75 கிலோவிற்கு சமம்). இது கடந்த ஆண்டு உற்பத்தியான 52 லட்சம் மூட்டைகளை விட குறைவாகும். மொத்த உற்பத்தியில் ஆந்திரா மற்றும் தெலுங்கானா 20 இலட்சம் மூட்டைகள் பங்களிப்பும், மகாராஷ்டிரா 10 இலட்சம் மூட்டைகள் பங்களிப்பும் மற்றும் தமிழ்நாடு 7 இலட்சம் மூட்டைகள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆந்திரா, தெலுங்கானா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் இந்தியாவின் மொத்த மஞ்சள் உற்பத்தியில் 70 சதவீத பங்கு வகிக்கின்றன. வர்த்தக மூலங்களின் படி, நடப்பாண்டில் ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களில் மொத்த மஞ்சள் உற்பத்தி 10 - 15 சதவீதம் குறைந்துள்ளது. இது, தமிழ்நாட்டில் 30 - 40 சதவீதமாக குறைந்துள்ளது. இதற்கு காரணம், மஞ்சள் நடவின் போது ஏற்பட்ட மழை குறைவு, இருப்பு மற்றும் கடந்த ஆண்டுகளில் நிலவிய விலை குறைவு ஆகும்.

தற்போது மஞ்சளின் விலை குவிண்டாலுக்கு ரூ. 5800 – 6800ஆக உள்ளது. இவ்விலை குறைவிற்கான காரணம் தேவை குறைவு மற்றும் தரமான மஞ்சளின் வரத்து குறைவாகும். பிப்ரவரி, 2015 முதல் புதிய வரத்து துவங்குகிறது.

வர்த்தக மூலங்களின் படி, இந்தியாவின் மொத்த மஞ்சள் தேவை ஆண்டுக்கு 75 இலட்சம் மூட்டைகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் மொத்த இருப்பு 40 – 45 இலட்சம் மூட்டைகள் ஆகும். இவற்றில் தமிழ்நாட்டின் இருப்பு 20 – 22 இலட்சம் மூட்டைகள் எனவும் தேவை மாதத்திற்கு 3 இலட்சம் மூட்டைகள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இச்சூழலில் விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 25 ஆண்டுகளாக நிலவிய மஞ்சள் விலை மற்றும் வர்த்தகர்களிடம் ஆய்வு நடத்தியது.

சந்தை மற்றும் பொருளியல் ஆய்வுகளின் அடிப்படையில், டிசம்பர், 2014 - ஜனவரி, 2015ல் நல்ல தரமான மஞ்சளின் விலை குவிண்டாலுக்கு ரூ.6800 – 7200 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்க்கப்படும் மஞ்சள் ஏற்றுமதி, வடஇந்தியாவின் தேவை மற்றும் நடப்பாண்டில் மஞ்சள் சாகுபடி பரப்பு ஆகியவற்றின் அடிப்படையில் விலை உயர வாய்ப்பு உள்ளன. நல்ல தரமான மஞ்சள் விலையை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாகும். எனவே விவசாயிகள் மஞ்சளை இருப்பு வைத்து பிப்ரவரி, 2015ல் விற்க பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-641003.
தொலைபேசி- 0422-2431405.

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசனை மற்றும் தோட்டக்கலை பயிர்கள்,
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி எண்: 0422-6611284
தொலைநகல்: 0422-2430781
மின்அஞ்சல்: spices@tnau.ac.in

மக்கள் தொடர்பு அலுவலர்